செயலகத்தைச் சேர்ந்த துணைச் செயலாளருடைய மேற்பார்வையில் இந்தத் தொகுப்புப் பணி நடைபெறுகிறது. இதிலே முக்கியமானவை என்று கருதப்படக்கூடிய அளவிற்கு, அந்த 30 நிமிடத்திலே, 3 மணி நேர நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் தொகுக்க வேண்டியிருக்கிறது. அதிலே சில நேரங்களிலே துரைமுருகன் விடுபட்டுப் போயிருந்தால் சேர்த்துக்கொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

முற்பகல் 10-50

2. தகவல் கோரல்

சட்டக் கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதம்

திரு. பரிதி இளம்வழுதி: சட்டக் கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதம் குறித்து ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நீங்கள் அதைப் பற்றி ஏற்கெனவே சொன்னீர்கள். திருமாவளவன் அவர்கள் பேச்சிலே அது இடம் பெறப் போகிறது. அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: அவர் பேசும்போது சொல்லட்டும். இது என்னுடைய உரிமைப் பிரச்சினை. சட்டக் கல்லூரி மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அதைப்பற்றி அவர் பேசுவார். பொதுக் கணக்குக் குழுவினுடைய அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி அவர்களே, அதைப் பற்றிய பதில் வருகிறது. நீங்கள் சொன்ன பிரச்சினைக்கு பதில் வரப் போகிறது. (குறுக்கீடுகள்)

திரு. ஜி.கே. மணி: நான் சொல்லிவிடுகிறேன். சொன்னால்தான் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: சட்டக் கல்லூரி மாணவர்கள் ..

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

2002 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமாவளவன் அவர்கள் அதைப் பற்றிப் பேசப் போகிறார். அதற்கான பதிலை முதலமைச்சர் சொல்வார்கள். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

3. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது முதல் பதினெட்டாவது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அறிக்கை ஒன்றை வழங்குவார்கள்....

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

சட்டக் கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதம்—தொடர்ச்சி.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவருடைய அனுமதியில்லாமல் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். என்னிடத்திலே வந்து கேட்டீர்கள். நான் விளக்கம் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அமருங்கள். (குறுக்கீடுகள்) திருமாவளவன் என்பவர் உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர், உங்கள் கட்சியின் சார்பாகப் பேசப் போகிறார். அதற்கு முதலமைச்சர் தன்னுடைய பதிலுரையிலே விளக்கம் சொல்வார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, உட்காருங்கள். உங்கள் பிரச்சினைக்குத்தான் பதில் வருகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2002 மார்ச் 13

திரு. பரிதி இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி இளம்வழுதி உட்காருங்கள். நான் முதலமைச்சர் அவர்களை அறிக்கையைப் படிப்பதற்கு அழைத்து விட்டேன். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் ஒலிபெருக்கி இல்லாமல் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) அவர்களும் ஒலிபெருக்கி இல்லாமல் பேசுகிறார். ஒலிபெருக்கி இல்லாமல் என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்களும் பேசுகிறீர்கள், அவர்களும் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் எப்படிப் பேசியிருக்கிறீர்களோ அதேமாதிரி பேசுகிறார், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒலிபெருக்கியினுடைய துணை இல்லாமல், பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் நீங்களும் பல நேரங்களிலே பேசுகிறீர்கள். நீங்கள் பேசுவதற்கு அங்கேயிருந்து பதில் வருகிறது. (குறுக்கீடுகள்) இது குறித்து எல்லாம் நடவடிக்கை எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னதற்கு அவர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) ஒலிபெருக்கியினுடைய துணை இல்லாமல், பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் நீங்கள் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருடைய அனுமதியில்லாமல் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.